பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 07 2026** **7 15**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலக அமைதி மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு இந்தியாவும் - நியூசிலாந்தும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்க முடியும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்தியாவின் கடற்பகுதிக்குள் யாரும் ஊடுருவ முடியாத வகையில் அதைப் பலப்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. செயற்கை நுண்ணறிவை நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும் என்று மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்தார்.

4. உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ள அதிநவீன போர்கப்பலான மகேந்திரகிரி இன்று கடற்படையில் சேர்க்கப்படுகிறது.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் அரையிறுதிக்கு ஸ்பெயின் முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உலக அமைதி மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு இந்தியாவும் - நியூசிலாந்தும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்க முடியும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆக்லாந்தில் நியூசிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோபர் லக்சனுடன் இன்று காலை பிரதிநிதிகள் மட்டத்திலான பேச்சுகளின்போது இதனை அவர் தெரிவித்தார்.

இந்திய - பசிபிக் பிராந்தியத்தில் கடல் மார்க்கமாக இரு நாடுகளுக்கிடையே உள்ள நெருக்கமான ஒத்துழைப்பு காரணமாக இரு நாடுகளும் இயல்பான நட்பு நாடாக உள்ளன என்று கூறினார்.

இரு நாடுகளுக்கு இடையே அதிகரித்து வரும் வர்த்தகம், எதிர்காலத்திற்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் உள்ளது என்றும் திரு. மோடி கூறினார்.

கடந்த ஆண்டு ஹோலி பண்டிகையின்போது நியூசிலாந்து பிரதமர் இந்தியாவுக்கு வருகை தந்ததை குறிப்பிட்ட பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஹோலியின் வண்ணங்களைப் போல அவரது வருகை இரு நாடுகளின் உறவிலும் புதிய எழுச்சியை உருவாக்கியது என்று கூறினார்.

நியூசிலாந்து பிரதமர் திரு. கிரிஸ்டோபர் லக்சன் பேசுகையில் கடந்த 40 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் நியூசிலாந்து வருகை தருவது சிறப்பானது என்று கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கிடையே மக்களுக்கு இடையிலான தொடர்புகள் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவின் கடற்பகுதிக்குள் யாரும் ஊடுருவ முடியாத வகையில் அதைப் பலப்படுத்துவதில் மத்திய அரசு உறதியுடன் இருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

நேற்று புதுதில்லியில் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவாலுடன் துறைமுகங்களின் பாதுகாப்பு ஏற்பாடு குறித்து ஆய்வு செய்தபோது இதை அவர் தெரிவித்தார்.

துறைமுகப் பாதுகாப்பிற்காக உரிமம் பெற்ற தனியார் பாதுகாப்பு முகவர்களிடம் மட்டுமே பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டும் என்றும், மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரால் பயிற்சி பெற்ற

பணியாளர்கள் மட்டுமே பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

துறைமுக பாதுகாப்பு பயிற்சி நிறுவனத்தில் தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி மேம்படுத்தப்பட்ட பயிற்சியை விரைவில் தொடங்க வேண்டும் என்றும் திரு. அமித் ஷா அறிவுறுத்தினார்.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவை நாட்டின் வளர்ச்சிக்கும் கலாச்சாரப் பாதுகாப்பிற்கும் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் நேற்று உரையாற்றிய அவர், அறிவியல் மற்றும் சமூகம் இணைந்து வளர்ந்து வரும் இன்றைய சூழலில், செயற்கை நுண்ணறிவை ஒரு சவாலாகப் பார்க்காமல், அதை வாய்ப்பாக மாற்ற வேண்டும் கேட்டுக்கொண்டார்.

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இந்தியாவின் பாரம்பரிய கலாச்சாரத்திற்கும், தேசிய முன்னுரிமைகளுக்கும் ஏற்ப அமைய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விழாவில் பேசிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர், தொழில்நுட்பங்களை வெறும் பயன்பாட்டாளராகப் பெண்கள் பார்க்கக் கூடாது என்றும், புதிய தொழில்நுட்பங்களைஉருவாக்குவதிலும் பெண்கள் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்கத் தொழில்நுட்ப புத்தாக்கத்தில் பெண்களின் பங்களிப்பு அவசியம் என்றும் அவர் கூறினார்.

'இந்தியா ஏஐ' திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் வலுவான செயற்கை நுண்ணறிவு உள்கட்டமைப்பை அரசு உருவாக்கி வருவதாகவும் திருமதி சாவித்திரி தாக்கூர் தெரிவித்தார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மஸ்கட்டில் நேற்று ஓமன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Badr Bin Hamad Al-Busaidi**-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுகள் நடத்தினார்.

வர்த்தகம், முதலீடு, கடல்சார் வணிகம், தொழில்நுட்பம், சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பாக இருவரும்

விரிவாக ஆலோசனை நடத்தியதாக சமூக ஊடகத்தில் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், அந்தப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் நீடித்த தன்மையை உறுதி செய்வதற்கான முயற்சிகள் குறித்தும் கருத்துகளை பரிமாறிக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா - ஓமன் நாடுகளுக்கிடையே உத்திசார்ந்த ஒப்பந்தம் தொடர்பாகவும் பேச்சுகள் நீடித்ததாக திரு. ஜெய்சங்கர் மேலும் கூறியுள்ளார்.

<<<<>>>>

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ள அதிநவீன போர்கப்பலான மகேந்திரகிரி இன்று கடற்படையில் சேர்க்கப்படுகிறது.

விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்கு கடற்படை தலைமை அலுவலகத்தில் நடைபெற உள்ள விழாவில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கலந்துகொள்கிறார்.

பாதுகாப்புத்துறையில் தன்னிறைவை குறிக்கும் வகையில் உள்நாட்டில் உள்ள தொழில்நுட்பத்தைக் கொண்டு இந்தக் கப்பல் கட்டப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலின் கட்டுமானத்தில் ஏராளமான சிறு குறு நடுத்தர நிறுவனங்களும் முக்கிய பங்காற்றியுள்ளன.

இந்தக் கப்பலில் பொருத்தப்பட்டுள்ள அதிநவீன ஆயுதங்களும், சென்சார் மற்றும் மின்னணு சாதனங்களும் உள்நாட்டைச் சேர்ந்தவை என்று கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

மகாராஷ்டிரா முன்னாள் முதலமைச்சர் அஜித் பவார் விமான விபத்தில் உயிரிழந்தது தொடர்பாக தேவைப்பட்டால் சி.பி.ஐ. விசாரணைக்கு மாநில அரசு பரிந்துரைக்கும் என்று முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவை மற்றும் சட்ட மேலவையின் மழைக்காலக் கூட்டத்தொடர் நேற்று நிறைவடைந்தது.

நேற்று சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகள் இப்பிரச்சினையை எழுப்பியபோது அதற்கு பதிலளித்த அவர், விமான விபத்து குறித்து தனித்தனியாக 2 விசாரணைகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

விமானத்தை இயக்கிய விமானி குறித்து இதுவரை சந்தேகத்திற்குரிய எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும், விமானத்தின் அனைத்து தொழில்நுட்ப அமைப்புகளும் ஆய்வு

செய்யப்பட்டு இடைக்கால அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இறுதி அறிக்கை வரும் ஜனவரி மாதம் கிடைக்கும் என்றும், அதன் பின்னர் விசாரணையின் அடுத்தகட்டம் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் திரு. ஃபட்னவிஸ் தெரிவித்தார்.

<<<<>>>>

ரயில்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும், செயல்திறனை அதிகரிக்கவும் வடக்கு ரயில்வேயில் 680 வழித்தடங்களில் கவாச் பாதுகாப்பு அமைப்பை செயல்படுத்த வகை செய்யும் 206 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு ரயில்வே ஒப்புதல் அளித்துள்ளது.

அதிக பயணிகள் பயணிக்கம் வழித்தடங்கள் மற்றும் முக்கியமான வழித்தடங்களில் ரயில் பாதைகளின் பாதுகாப்பை பலப்படுத்த இது உதவும் என்று ரயில்வே அமைச்சக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தில்லி கோட்டத்திற்குட்பட்ட ரேவாரி - தில்லி, தில்லி - பட்டிண்டா வழித்தடங்களில் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு தொழில்நுட்பம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

சிக்னல் மீறல் சம்பங்கள் மற்றும் ரயில் விபத்துகளைத் தடுப்பதன் மூலம் ரயில்வே பாதுகாப்பை கணிசமாக மேம்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

குஜராத் மாநிலம் முழுவதும் கிராமப்புற இணையதள உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் விதமாக, குஜராத் அரசு மற்றும் பிஎஸ்என்எல் ஆகியவற்றுக்கு இடையே முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

மேம்படுத்தப்பட்ட 'பாரத்நெட்' திட்டத்தை குஜராத்தில் செயல்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் குஜராத்தில் உள்ள சுமார் 14 ஆயிரத்து 287 கிராம ஊராட்சிகளில் அதிவேக இணைய சேவை வழங்கப்பட உள்ளது.

ஏற்கனவே உள்ள 14 ஆயிரத்து 264 கிராம ஊராட்சிகளில் இணைய கட்டமைப்பு தடையின்றி இயங்கும் வகையில் அதன் தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், புதிதாக உருவாக்கப்பட்ட 23 கிராம ஊராட்சிகளில் இணைய வசதியை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

நைஜீரியாவின் தென்மேற்குப் பகுதியான **Oyo** மாநிலத்தில், சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு பள்ளிகளிலிருந்து கடத்தப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நைஜீரிய பாதுகாப்பு முகமைகளால் மீட்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை அதிபரின் செய்தித் தொடர்பாளர் திரு. பேயோ ஓனனுஹா நேற்று அறிவித்தார்.

ஒருங்கிணைந்த பாதுகாப்பு நடவடிக்கையின் மூலம் கடத்தப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மீட்கப்பட்ட சில பாதிக்கப்பட்டவர்களின் புகைப்படங்கள் மற்றும் காணொளியுடன் கூடிய அறிக்கையில், இந்த நடவடிக்கையின்போது கடத்தலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் **8** பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தற்போது நைஜீரியாவின் உள்நாட்டு உளவு அமைப்பான 'அரசுப் பணிகள் துறையின்' காவலில் இருப்பதாகவும் திரு. ஓனனுஹா குறிப்பிட்டார்.

மேலும், இந்த நடவடிக்கையின் போது கடத்தல்காரர்களில் பலர் கொல்லப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

**உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் அரையிறுதிக்கு ஸ்பெயின் முன்னேறியுள்ளது.**

**லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஸ்பெயின் 2-1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை வென்றது.**

------------

**இங்கிலாந்துக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 285 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

**லண்டனில் நேற்று தொடங்கிய இந்தப் போட்டியில் ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து ஒரு விக்கெட் இழப்புக்கு 21 ரன் எடுத்திருந்தது.**

**<<<<The End>>>>**